**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சூலூர்**

**முன்னிலை: திருமதி.எம். சந்தோஷம்., பி.எஸ்.சி., பி.எல்.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, சூலூர்**

திருவள்ளுவர் ஆண்டு 2056 ஆண்டு விசுவாவசு வருடம், புரட்டாசி மாதம் 3 ம் நாள்

2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 19-ம் நாள் வெள்ளிக்கிழமை

**இடைக்கால மனு எண்.11/2025**

**in**

**அசல் வழக்கு எண். 39/2021**

1. சுப்பிரமணியம் (Died)
2. நடராஜன்
3. ரங்கசாமி கவுண்டர்
4. ஜெகந்நாதன்
5. துளசிமணி
6. பாலகிருஷ்ணன்
7. கனகராஜ் **...மனுதாரர்கள் / 1 முதல் 4, 8 முதல் 10 பிரதிவாதிகள்**

//எதிர்//

1. ஈஸ்வரமூர்த்தி .....**எதிர்மனுதாரர் / வாதி**

இந்த மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.சின்னசாமி, அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.செந்தில்இளங்கோவன் அவர்கள் ஆஜராகியும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் சீரிய கண்காணிப்பில் இருந்து வந்து சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டு இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**உத்தரவு**

உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 8 விதி 9 ன் கீழ் கூடுதல் எதிர் வழக்குரை தாக்கல் செய்துள்ளதை ஏற்றுக்கொள்ள வேண்டி மனுதாரர்களால்

இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்:**

1.1). அசல் வழக்கு விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், இதர பரிகாரங்கள் கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்வழக்குரை தாக்கல் செய்த போது வழக்குக்கு தேவையான முக்கியமான பொருண்மைகள் எதிர்வழக்குரையில் விடப்பட்டுள்ளது. ஏற்கனவே எதிர்வழக்குரையில் சொல்லி உள்ள பொருண்மைகளுக்கு எதிராக கூடுதல் எதிர் வழக்குரையில் எவ்வித வாக்குமூலமும் அளிக்கவில்லை. எதிர்வழக்குரையில் உரிமை குறித்து பொருண்மையில் சொல்லவில்லை என்றால் அது சம்மந்தமாக சாட்சியை குறுக்கு விசாரணையில் கேள்வி கேட்க முடியாது.

1.2). எதிர்வழக்குரையில் சொல்லியுள்ள சங்கதியானது விளக்கப்பட்டு மட்டுமே உள்ளது. கூடுதல் எதிர் வழக்குரையானது பிரமாண வாக்குமூலத்தின் ஒரு அங்கமாக பாவிக்க வேண்டியது. மேற்படி கூடுதல் எதிர்வழக்குரையான அனுமதிக்கப்படாவிட்டால் மனுதாருக்கு பெருத்த கஷ்ட நஷ்டம் ஏற்படும். வா.சா.1 குறுக்கு விசாரணை எதிர்மனுதாரர் தரப்பில் இன்னும் செய்யப்படவில்லை. மேற்படி மனுவானது அனுமதிக்கப்பட வேண்டும்.

**2). எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம் :**

2.1). மேற்படி மனு பொய்யானது, மோசடியானது. மேற்படி மனுவானது சட்டப்படியும், நியாயப்படிக்கும் நிலைநிற்கத்தக்கதல்ல. மனுதாரர்கள், தாவா அசல் வழக்கு விசாரணை தொடங்கிய பின்பு தாவா வழக்கில் இந்த எதிர்மனுதாரர் / வாதிக்கு சீர் நிலை நோக்கும், முதல் நிலை நோக்கும் சாதகமாக உள்ளது என்பதை அறிந்துகொண்டு கோவை சார்பு நீதிமன்றததில் வழக்கு தாக்கல் செய்திருப்பதாக கூறி பல வாய்தாக்கள் பெற்ற பின்பு நீதிமன்றம் புதிய வழக்கினுடைய எண்ணை சமர்ப்பிக்க கோரிய பின்பு, அது போன்ற வழக்கை இந்த பிரதிவாதிகள் எப்போதுமே

தாக்கல் செய்யாததால் வேறு வழியின்றி அசல் வழக்கினுடைய விசாரணை போக்கை இழுத்தடிப்பு செய்து வயதான இந்த எதிர்மனுதாரர்/வாதியை அலைக்கழிவு செய்ய வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் எவ்விதமான சாதகமான சூழலும் இல்லாத நிலையில் தாவா கூடுதல் எதிர்வழக்குரையை தாக்கல் செய்துள்ளார். இந்த எதிர்மனுதாரர்/வாதி தாவா சொத்தைப் பொறுத்து ஏற்கனவே தனது அசல் வழக்குரையில் மிகத் தெளிவான சங்கதிகளை இந்த நீதிமன்றத்தில் கூறி வழக்கு தாக்கல் செய்துள்ளார். எதிர்மனுதாரர்/வாதி இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கில் கண்டுள்ள சங்கதிகளை இந்த பதில் வழக்குரையின் ஒரு பாகமாக கருதிக்கொள்ள எதிர்மனுதாரர்/வாதி வேண்டிக் கொள்கிறார்.

2.2). மனுதாரர்கள்/பிரதிவாதிகள் காலம் கடந்த ஏற்கனவே எதிர்வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளை மீண்டும் புதியது போல சொல்லி தாக்கல் செய்துள்ள கூடுதல் எதிர்வழக்குரையானது இந்நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். வழக்கின் போக்கை நீட்டித்துச் செல்ல வேண்டுமென்பதற்காக மனுதாரர்கள் வேண்டுமென்றே இதபோன்ற மனுக்களை தாக்கல் செய்துள்ளதால், மனுதாரர்களின் மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டிய ஒன்றாகும்.

**3.** இம்மனு அனுமதிக்கதக்கதா? என்பதே தீர்வுகாணப்பட வேண்டியுள்ளது.

**4.** இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

**5.** மனு பிரமாணப்பத்திரிக்கை, எதிருரை, மற்றும் இருதரப்பு வாதுரைகள் கவனமாக பரிசீலிக்கப்பட்டன. இரு தரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. அசல் வழக்கானது செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அசல் வழக்கானது வா.சா.1 குறுக்கு விசாரணைக்காக நிலுவையில் உள்ள போது 1 முதல் 4 மற்றும் 8 முதல் 10 பிரதிவாதிவாதிகள் இந்த மனுவை கூடுதல் எதிர்வழக்குரையை ஏற்றுக்கொள்ள வேண்டி தாக்கல் செய்துள்ளார்கள்.

5.1). மனுதாரர் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்த போது வழக்குக்கு தேவையான முக்கியமான பொருண்மைகள் எதிர்வழக்குரையில் விடப்பட்டுள்ளது என்று சொல்லப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் எதிர்மனுதாரர்/வாதிக்கு தாவா அசல் வழக்கில் சீர்நிலை நோக்கு உள்ளது என்பதை அறிந்து தாவா வழக்கின் போக்கை நீட்டித்துச் செல்ல வேண்டும் என்பதற்காக மனுதாரர்கள் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்கள் என சொல்லப்பட்டுள்ளது.

5.2). கூடுதல் எதிர்வழக்குரை மற்றும் பிரமாணப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விஷயங்களும், எதிர்வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளை விளக்கப்பட்டு மட்டுமே சொல்லப்பட்டுள்ளது. அசல் வழக்கானது விளம்புகை பரிகாரம் மற்றும் நிரந்த உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, இந்த கூடுதல் எதிர்வழக்குரையை அனுமதிப்பதன் மூலம் அசல் வழக்கின் தன்மையை பாதிக்காது. எனவே, நீதியின் நலன் கருதி இம்மனு அனுமதிக்கப்படுகிறது.

**முடிவாக மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.**

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 19-ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

Sd/M.Santhosham

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**சூலூர்.**

**மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :-** இல்லை

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :-** இல்லை

Sd/M.Santhosham

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**தூலூர்.**

Draft/Fair order
IA.No.11/2025 in
OS.39/2021 in
Dated:.19.09.2025
DMC, Sulur.